இதயத்தின் உயிர் நாடியே
தமிழ் ஈழத்தின் உயிர் நாடியே 2
தேசத்தின் தேசியத்தை காக்கும்
தேகத்தின் நிலையான மணலாறே

இதயத்தின் உயிர் நாடியே
தமிழ் ஈழத்தின் உயிர் நாடியே

உறுமலின் பலமான நிலமே
புலி உறுமலின் உயர்வான கனலே 2
எதிரியை எரிக்கின்ற தணலே 2
இது என்னாளும் எம் இனத்தின் நிலமே

இதயத்தின் உயிர் நாடியே
தமிழ் ஈழத்தின் உயிர் நாடியே

விழிகள் இங்கே உறங்குவதில்லை
புலி வீரர்கள் இங்கே ஓய்வதும் இல்லை 2
செழிப்பான வளமும் இங்குண்டு 2
என்றும் செயலாற்றும் மக்களும் இங்குண்டு 2

இதயத்தின் உயிர் நாடியே
தமிழ் ஈழத்தின் உயிர் நாடியே

வருகின்ற சிங்களத்தை சிதறடிக்க
இங்கு வரிப்புலி படை என்றும் அணி வகுக்கும் 2
ஆயிரம் ஜென்மங்கள் போர் என்ற போதும்
இங்கு அசையாது போரிடுவான் மறத்தமிழன்

இதயத்தின் உயிர் நாடியே
தமிழ் ஈழத்தின் உயிர் நாடியே 2
தேசத்தின் தேசியத்தை காக்கும்
தேகத்தின் நிலையான மணலாறே

இதயத்தின் உயிர் நாடியே
தமிழ் ஈழத்தின் உயிர் நாடியே